<u>சுருக்கம்</u>

நல வாரியங்கள்—தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்நல வாரியம்—2007—2008 ஆம் ஆண்டு ரூ.1.00 லட்சம் செலவில் 100 தொழிலாளர்களுக்கு பயிற்சியளித்தல்—ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத்(ஐ1) துறை

அரசாணை (டி) எண். 489 நாள். 27.6.2007

படிக்க:—

1. தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர்நல வாரியச் செயலாளரின் கடிதம் .எண்.153/2007 நாள் 24.3.2007.

2. தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண்.டி1/16123/07 நாள் 29.3.2007.

<u>ஆணை</u>

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு காலணி தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர் நல வாரியச் செயலாளர் மேற்குறிப்பிட்ட வாரியம் 1.9.2006 முதல் செயல்பட்டு வருகிறது என்றும் இதில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு விபத்து மற்றும் இயற்கை மரண உதவி, கல்வி உதவி, திருமண உதவி, மகப்பேறு உதவி, ஈமச்சடங்கு உதவி, கண்கண்ணாடி வாங்கிட உதவி, ஓய்வூதிய உதவி ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது என்றும் காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டு இருக்கும் உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு தொழில் முறை சார்ந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள குடும்ப நபர்கள் பல்வேறு காரணங்களினால் முறையான பயிற்சி கிடைக்கப் பெறாததால் அவர்கள் தங்களது ஈடுபாட்டினை காண்பிப்பதில்லை என்பதால் காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டு இருக்கும் உடலுழைப்பு தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். முதற்கட்டமாக 50 நபர்கள் கொண்ட 2 குழுக்களாக 100 உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு பயிற்சியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் பயிற்சியின் காலஅளவு 3 மாதங்களாகும் என்றும் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.1.00 லட்சமாகும் என்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள வேலூர் மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டையில் இப்பயிற்சி அளிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேற்குறிப்பிட்ட தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல்பதனிடுதல் தொழிலாளர்நல வாரியச் செயலாளரின் கருத்துருவை மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் தொழிலாளர் ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. மாண்புமிகு தொழிலாளர்நல அமைச்சர் அவர்கள் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை மானியக் கோரிக்கையின் போது வெளியிட்ட 2007–2008–ஆம் ஆண்டுக்கான புதிய அறிவிப்புகளில் "தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள காலணி மற்றும் தோல்பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 100 தொழிலாளர்களுக்கு ரூ.1,00,000/– அரசு மானியத்தில் முறையான பயிற்சி வேலூர் மாவட்டம் இராணிப்பேட்டையில் அளிக்கப்படும்" என்று அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அதற்கிணங்க மேற்குறிப்பிட்ட கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்தது.

4. தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள காலணி மற்றும் தோல்பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 100 தொழிலாளர்களுக்கு ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) அரசு மானியத்தில் முறையான பயிற்சி, வேலூர் மாவட்டம் இராணிப்பேட்டையில் அளிக்க அரசு ஆணையியிகிறது. மேற்குறிப்பிட்ட செலவினம் ரு.1.00 லட்சத்தை 2007–2008 ஆம் நிதியாண்டிற்கான அமைப்பு சாரா தொழிலாளர்நல வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.516.04 லட்சம் தொகையில் மேற்கொள்ள தொழிலாளர் ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செயப்பட்டுள்ள தொகை கீழ்க் காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2230. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு 01. தொழிலாளர்–

111. தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு JA. அமைப்பு சாரா தொழிலாளர்நல வாரியத்திற்கான மானியம் 09. உதவி மானியங்கள்
01. நடப்புச் செலவுக்கான மானியங்கள்
(த.தொ.கு.எண்.2230–01–111.JA 0914)

6 இந்த அரசாணை நிதித்துறை, அ. சா. கு. எண். 41033/தொ(ம)வே/2007-1, நாள் 26.6.2007, இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரமேஷ் குமார் கன்னா,
அரசுச் செயலாளர்

பெறுநர்
தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006
செயலர், தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர்நல வாரியம், சென்னை–600 034
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–600 035
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–600 009

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–600 005
மாநிலக் கணக்காயர், சென்னை–600 018
மாநிலக் கணக்காயர், சென்னை–600 009
நகல்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
நிதித்துறை, சென்னை–600 009
மாண்புமிகு தொழிலாளர்நல அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு செயலரின் நேர்முக உதவியாளர்
சென்னை–600 009

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்